இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 833-834/2022

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்கள் 10039-10040/2016-லிருந்து எழுகிறது)

ஏ. ஜி. பேரறிவாளன் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

மாநில அரசு,
காவல்துறை கண்காணிப்பாளர் மூலமாக,
சி.பி.ஐ./எஸ்.ஐ.டி./எம்.எம்.டி.ஏ.
சென்னை, தமிழ்நாடு மற்றும் ஒருவர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண் 835/2022

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 2363/2021-லிருந்து எழுகிறது)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஸ்வர ராவ்:

அனுமதி வழங்கப்பட்டது

1. முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 21.05.1991 அன்று படுகொலை செய்யப்பட்டதற்காக ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 329/1991-இல் மேல்முறையீட்டாளர் 18-ஆம் எதிரியாவார். 1860 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டம் (சுருக்கமாக இ.த.ச.), 1951 ஆம் ஆண்டு ஆயுதங்கள் சட்டம், 1908 ஆம் ஆண்டு வெடி பொருட்கள் சட்டம், 1967 ஆம் ஆண்டு கடவுச்சீட்டு சட்டம், 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் சட்டம், 1933 ஆம் ஆண்டு இந்திய கம்பியில்லாத் தந்தி சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டு பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் (ப.ம.சீ.ந.) (சுருக்கமாக 'தடா') ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர் தண்டிக்கப்பட்டார்.

அவருக்கு தடா நீதிமன்றம் எனும் தனி நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நீதிமன்றம், 11.05.1999 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பினை உறுதி செய்தது.எனினும், தடா சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு நீக்கறவு செய்யப்பட்டது.மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனு 08.10.1999 ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.மேல்முறையீட்டாளர், மற்ற மூவருடன் சேர்ந்து, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன்கீழ் தமிழக ஆளுநரிடம் கருணை மனுக்களை தாக்கல் செய்தார், அவை 27.10.1999 அன்று நிராகரிக்கப்பட்டன.தமிழகத்தின் உயர் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளரின் கருணை மனு ஆளுநரால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அது 25.04.2000 அன்று மீண்டும் நிராகரிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 72-இன் கீழ் இந்திய குடியரசுத் தலைவரிடம் கருணை மனு தாக்கல் செய்தார், அதுவும் 12.08.2011 அன்று நிராகரிக்கப்பட்டது. இதனால் மனக்குறையுற்று, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி நீதிப்பேராணை மனு 01.05.2012 தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அதன்பின்னர், மேல்முறையீட்டாளரின் மரண தண்டனை, 18.02.2014 அன்று ஆயுள் தண்டனையாக இந்த நீதிமன்றத்தால் குறைக்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர், 23 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்திருப்பதைக் கருத்திற்கொண்டு, மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையைக் குறைக்க தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு பரிந்துரைத்து, மூன்று நாட்களுக்குள் அதன் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது.1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (சுருக்கமாக கு.ந.ச.) பிரிவு 435-ஐ கருத்திற்கொண்டு மேற்படி பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால், அதன்படி மத்திய அரசை கலந்தாலோசிக்க வேண்டும், ஏனெனில், மத்திய புலனாய்வுத் துறையால் (ம.பு.து.) வழக்கு விசாரிக்கப்பட்டது.

மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து,18.02.2014 அன்று இந்நீதிமன்றத்தால் தீர்வுசெய்யப்பட்ட வழக்குகளில் ஒன்றிய அரசு உடனடியாக குற்றவியல் பல்வகை மனுக்களை தாக்கல் செய்தது.மேல்முறையீட்டாளரை விடுவிக்கக்கூடாது என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிடும்படி இம்மனுக்களில் மைய அரசு கோரியது.மேற்படி குற்றவியல் பல்வகை மனுக்களில் 20.02.2014 அன்று தற்போதுள்ள நிலையைக் கடைப்பிடிக்கும்படியான உத்தரவு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளரின் தண்டனையைக் குறைத்து வழங்கப்பட்ட 18.02.2014 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரைக்கு எதிராக ஒன்றிய அரசால் தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன .

3. தமிழ்நாடு அரசின் 19.02.2014 ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தையும், மேல்முறையீட்டாளர் மற்றும் வேறு சிலருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மாற்றி குறைப்பது/தண்டனையைக் குறைப்பது குறித்து பரிசீலிக்கும் அதன் முடிவையும் செல்லாததாக்குவதற்காக 24.02.2014 அன்று ஒன்றிய அரசு ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தது. இந்த நீதிப்பேராணை மனு, பரிசீலனைக்காக ஏழு கேள்விகளை உருவாக்கியபின் 25.04.2014 ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்நீதிமன்றம், 02.12.2015 தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் மூலம் **இந்திய ஒன்றியம் -எதிர்- ஸ்ரீஹரன்**[1] எனும் வழக்கில் பரிசீலனைக்காக வனையப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தது.

4. மேல்முறையீட்டாளர், அவரது தண்டனைக் குறைப்புக்காக அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன்கீழ் 30.12.2015 அன்று மனு தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளரை விடுதலை செய்ய பரிந்துரைத்து 09.09.2018.

.....

1. (2016) 7 எஸ்.சி.சி. 1

மேல்முறையீட்டாளருக்கு தண்டனைக் குறைப்பு வழங்க மாநில அரசு பரிந்துரைத்ததை செல்லாததாக்குவதற்கு ஒன்றிய அரசால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவானது, மேல்முறையீட்டாளரால் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது எனும் பொருண்மையைக் கருத்திற்கொண்டு 06.09.2018 அன்று இந்நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட்டதுடன், மேற்படி மனுவை அது தக்கதென கருதுகின்றவாறு தீர்வு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிமை அளிக்கப்பட்டது. அன்று தமிழ்நாடு அமைச்சரவையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது ஆளுநருக்கு அனுப்பப்பட்டது.

5. இதற்கிடையில், படுகொலை குறித்து நிலுவையில் உள்ள விசாரணையைத் திறம்பட கண்காணிக்கும்படி கோரி சென்னை தடா வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் ஒரு குற்றவியல் பல்வகை மனுவை மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்தார். மேற்படி மனு 10.12.2013 அன்று தடா நீதிமன்றத்தால் நீக்கறவு செய்யப்பட்டது, அதற்கெதிராக மேல்முறையீட்டாளர் கு.வி.மு.ச.-இன் பிரிவு 482-இன்கீழ் குற்றவியல் முதலேற்பு மனுவை தாக்கல் செய்ததன் மூலம் உயர் நீதிமன்றத்தை அணுகினார். நிலுவையில் உள்ள விசாரணையை விரைவாக முடிக்கவும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை உயர் நீதிமன்றத்தின் முன்பாக நிகழ்நிலை அறிக்கையைத் தாக்கல் செய்யவும் சிபிஐ-க்கு உத்தரவிடக் கோரி மற்றொரு குற்றவியல் முதலேற்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் உச்ச நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், 06.03.2015 அன்று உயர் நீதிமன்றம் இரு மனுக்களையும் தனித்தனி உத்தரவுகளின் மூலம் தள்ளுபடி செய்தது. மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் 06.03.2015 அன்று பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்தரவுகளுக்கு எதிராக இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.தண்டனையை நிறுத்திவைக்கக் கோரி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.ம. எண் 118421/2017-இல் இந்த நீதிமன்றத்தால் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

6. இம்மேல்முறையீடுகள் நிலுவையில் இருக்கையில், மேல்முறையீட்டாளரை விடுதலை செய்யப் பரிந்துரைத்து 09.09.2018 அன்று தமிழக அமைச்சரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது ஆளுநரால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றத்திடம் தெரிவிக்கப்பட்டது. ஆளுநருக்கு அமைச்சரவை செய்த பரிந்துரையின் நிலை குறித்த விவரங்களைப் பெறுமாறு தமிழ்நாடு அரசுக்கான கூடுதல் தலைமை வழக்குரைஞருக்கு 11.02.2020 அன்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டது. பரோலில் (நிபந்தனையின்பேரில் விடுவித்தல்) விடுவிக்கப்படுவதற்கு தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களின் கேட்புகையின்போது, பல்நோக்கு ஒழுங்கு நடவடிக்கை கண்காணிப்பு முகமையின் (சுருக்கமாக, 'ப.ஒ.க.மு.') இறுதி அறிக்கைக்காக காத்திருப்பதால், மேல்முறையீட்டாளரின் தண்டனையைக் குறைப்பது தொடர்பாக மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரையின்மீது ஆளுநர் முடிவு எடுக்கவில்லை என்று உயர் நீதிமன்றத்திடம் தெரிவிக்கப்பட்டது. ப.ஒ.க.மு- இன் (எம்.டி.எம்.ஏ.) அறிக்கையைக் கோரி ஆளுநர் எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை என்றும், வகுமுறைக்கூறு 161-இன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அதன் தகுதிப்பாடுகளின் அடிப்படையில் தீர்வு செய்யலாம் என்றும் இந்நீதிமன்றத்திற்குத் தெரிவித்து ம.பு.து., 20.11.2020 அன்று இம்மேல்முறையீடுகளில் ஆணையுறுதியாவணம் தாக்கல் செய்தது.

7. இந்திய அரசின் கற்றறிந்த தலைமை வழக்குரைஞர் 21.01.2021 அன்று முன்னிலையாகி, வகுமுறைக்கூறு 161-இன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவின்மீது ஆளுநர் மேற்கொண்டு எந்தத் தாமதமுமின்றி முடிவெடுப்பார் என இந்நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். அதன்பிறகு, 04.02.2021 அன்று உள்துறை அமைச்சகத்தின் துணைச் செயலாளரால் ஆணையுறுதியாவணம் தாக்கல் செய்யப்பட்டது, அதில் மேல்முறையீட்டாளரால் வகுமுறைக்கூறு 161-இன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தீர்வு செய்வதற்கு இந்திய குடியரசுத் தலைவரே உரிய அதிகாரமுடையவர் என 25.01.2021 ஆம் தேதியிட்ட உத்தரவின்மூலம் ஆளுநர் முடிவு செய்து, அதனை தமிழக அமைச்சரவை செய்த பரிந்துரையுடன் இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

8. மேல்முறையீட்டாளர் 31 ஆண்டுகளுக்கும் மேல் சிறையில் கழித்துள்ளார், சிறையில் அவரது நடத்தை நன்றாக இருந்தது, அவர் பல்வேறு கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளார், மேலும் அவர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார் என்னும் சங்கதிகளைக் கருத்திற்கொண்டு இந்நீதிமன்றம் 09.03.2022 ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் மேல்முறையீட்டாளரை பிணையில் விடுவித்தது.

9. மேல்முறையீட்டாளரின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு.கோபால் சங்கரநாராயணன் சமர்ப்பித்ததாவது, மேல்முறையீட்டாளருக்கு தண்டனைக் குறைப்பு வழங்க வேண்டும் என்று மாநில அமைச்சரவை பரிந்துரைத்ததை குறித்து ஆளுநர் முடிவு செய்திருக்க வேண்டும். மாநில அமைச்சரவையின் பரிந்துரையை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநருக்கு அதிகாரம் இல்லை.மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரையானது ஆளுநரை கட்டுப்படுத்துகிறது, அவர் தனிப்பட்ட விருப்பதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்று அவர் வாதிட்டார். அமைச்சரவையின் துணை மற்றும் ஆலோசனையின்பேரில் ஆளுநர் வகுமுறைக்கூறு 161-இன்படியான அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளதால் அதிகபட்சமாக, மாநில அமைச்சரவையிடம் அதன் முடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு ஆளுநர் வேண்டுகோள் விடுத்திருக்கலாம், ஆனால் மாநில அமைச்சரவையின் பரிந்துரையை இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் அதிகாரம் அல்லது அதிகாரவரம்பு அவருக்கு இல்லை.மேலும் இந்திய குடியரசுத் தலைவரே உரிய அதிகாரம் பெற்றவர் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டால், வகுமுறைக்கூறு 161-இன்கீழ் இந்நாள்வரையில் ஆளுநரால் வழங்கப்பட்ட ஒவ்வொரு மன்னிப்பும்/தண்டனை நிறுத்திவைப்பும் அரசமைப்புக்கு புறம்பானது என்று வாதிடப்பட்டது

10. வகுமுறைக்கூறுகள் 161 முதல் 163 வரையிலானவற்றின் வரம்பு குறித்து இந்நீதிமன்றத்தின் ஒன்றுக்கும் மேற்பட்ட அரசமைப்பு அமர்வினால் விளக்கப்பட்டுள்ளது, அதன்படி, அரசமைப்புச் சட்டத்தால் வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவராவார் என்று தமிழ்நாடு அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு.ராகேஷ் திவேதி வாதுரைத்து மேல்முறையீட்டாளரின் நிலைப்பாட்டை ஆதரித்தார்.

அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில் ஆளுநரால் எடுக்கப்பட்ட முடிவு மாநில அரசின் அதிகாரவரம்புக்கு அப்பாற்பட்டது என்று கண்டறியப்பட்டால், அதனை அரசமைப்பு நீதிமன்றங்களில் எப்போது வேண்டுமானாலும் எதிர்த்துரைக்கலாம். எனினும், அமைச்சரவையின் பரிந்துரையின் மீது முடிவெடுக்க ஆளுநருக்கு அரசமைப்பின்படி அதிகாரமளிக்கப்படவில்லை. மாநில அமைச்சரவையின் பரிந்துரைகளை குடியரசுத் தலைவரின் முடிவுக்காக அனுப்புவதற்கு ஆளுநருக்கு அதிகாரமளிக்கும் எந்த வகையமும் அரசமைப்புச் சட்டத்தில் இல்லை என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.ஆளுநரின் இத்தகைய நடவடிக்கைகள், நமது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சமான இந்நாட்டின் கூட்டாட்சி அமைப்பினை மீறுவதாக இருக்கும்.

11. இந்திய அரசுக்கான கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞர் திரு.கே.எம்.நட்ராஜ் சமர்ப்பித்ததாவது, தற்போதைய வழக்கில் இந்திய ஒன்றிய அரசே தண்டனை காலத்தை குறைப்பதற்கு/தண்டனையை மாற்றிக் குறைப்பதற்கான உரிய அரசாகும். அவர் (மேற்படி) ஸ்ரீஹரன் வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் சில பத்திகளை துணைகொண்டதுடன், மேல்முறையீட்டாளரின் தண்டனை காலத்தை குறைப்பது/தண்டனையை மாற்றிக் குறைப்பது குறித்து இந்திய குடியரசுத் தலைவர் மட்டுமே முடிவெடுக்க முடியும் என்பதால், மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரைகளை ஆளுநர் அவருக்கு அனுப்பியது சரியானதே என்று வாதிட்டார். ஆளுநர் எப்போதும் அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டவர் அல்ல, மேலும் மேற்கூறப்பட்ட விதிமுறைக்கு அங்கீகரிக்கப்பட்ட விதிவிலக்குகள் உள்ளன, அதில் ஆளுநர் தனது சொந்த விருப்பப்படி செயல்பட வேண்டும் என அவர் மேற்கொண்டு வாதிட்டார். அவர் மேற்சொன்ன அறுதியுரைக்கு ஆதரவாக **ம.பி. ஸ்பெஷல் போலீஸ் எஸ்டப்ளிஷ்மென்ட்- எதிர்- ஸ்டேட் ஆப் மத்திய பிரதேஷ்**[2] என்ற வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் மீது சார்வுற்றார்,

.....

2 (2004) 8 எஸ். சி. சி. 788

அதில், அமைச்சரவை ஒருதலைபட்சமாக உள்ளது என்பது பொருண்மைகளின் அடிப்படையில் வெளிப்படையாகத் தெரிந்தால் மற்றும்/அல்லது அமைச்சரவையின் முடிவு, தொடர்புடைய காரணிகளை பரிசீலிக்காததன் அடிப்படையில், நியாயமற்றதென தெரியவந்தால், அத்தகைய நேர்வுகளில் அவ்வழக்கின் சங்கதிகளின்படி ஆளுநர் தனது சொந்த விருப்புரிமையின்பேரில் செயல்பட்டு அனுமதி வழங்குவது சரியாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டது. மாநில அமைச்சரவையின் பரிந்துரைகளை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தது தொடர்பாக மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்ட கருத்து, நீதிப்பேராணை மனுவின் வரம்புக்கு அப்பாற்பட்டது, எனவே அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இந்த நீதிமன்றத்தை திருப்தியுறச் செய்ய அவர் முயற்சித்தார்.

12. மேல்முறையீட்டாளரின் தண்டனை காலத்தை குறைக்க மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரையின்மீது ஆளுநர் முடிவெடுக்காமல், 25.01.2021 அன்று அதை இந்திய குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பியதில் உள்ள சரித்தன்மை மட்டுமே இந்த மேல்முறையீடுகளில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒரே அம்சமாகும். இவ்விடயம் இந்த மேல்முறையீட்டின் வரம்புக்குள் இல்லை என்ற கற்றறிந்த அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞரின் முதல்நிலை மறுப்புரையை நாங்கள் ஏற்றுக்கொள்வில்லை. மேல்முறையீட்டாளரால் தாக்கல்

செய்யப்பட்ட மனுக்களை ஏற்க மறுத்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிராக இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது மேற்கூறப்பட்ட சங்கதிகளிலிருந்து தெளிவாகிறது, அதில் ஒன்று, இவ்வழக்கின் மீதமுள்ள அம்சங்கள் குறித்த விசாரணையைத் திறம்பட கண்காணிப்பதற்கான கோரிக்கையை நிராகரித்த தடா வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு எதிரானதாகும். தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கக் கோரி மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் பல்வகை மனு எண் 118421/2017-இல் இந்நீதிமன்றம் அறிவிப்பு அனுப்பியது, மாநில அரசு ஏற்கெனவே முன்கூட்டியே விடுதலை செய்ய பரிந்துரைத்திருந்த போதிலும், (மேற்படி) **ஸ்ரீஹரன்** வழக்கின் தீர்ப்புரையைத் தொடர்ந்து வேண்டுறுத்தப்பட்டவாறு ஒன்றிய அரசு, மேல்முறையீட்டாளரின் எதிர்காலம் குறித்து 2017 வரையில் எந்த முடிவும் எடுக்கவில்லை என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும், இம்மேல்முறையீடுகள் நிலுவையில் இருக்கையில் தண்டனை காலத்தை குறைப்பதற்காக மேல்முறையீட்டாளரால் முன்கொணரப்பட்ட மனு, 09.09.2018 அன்று மாநில அமைச்சரவையால் அவருக்கு சாதகமாக பரிசீலிக்கப்பட்டது, ஆனால், மேற்படி பரிந்துரையின்மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்கவில்லை. இறுதியாக, மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரையின்மீது ஆளுநர் முடிவெடுக்காமல், அவ்விடயத்தை குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பினார். இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எழும் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டதன்பேரில், கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞரின் மறுப்புரையை நாங்கள் ஏற்க மறுப்பதுடன், மேல்முறையீட்டாளரால் முன்வைக்கப்பட்ட கருத்தினைபற்றி தீர்மானிக்க முற்படுகிறோம்.

13. மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் அளாவும் பொருள் குறித்த சட்டத்திற்கு எதிரான ஒரு குற்றச் செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரின் தண்டனையைப் பொறுத்து குற்றமன்னிப்புகள் அளிக்கவும், தண்டனையை நிறுத்திவைக்கவும், அதை நிறைவேற்றுவதைத் தள்ளிவைக்கவும் அல்லது எஞ்சிய தண்டனை காலத்தை குறைக்கவும் அல்லது தீர்ப்புத்தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க, தண்டனை காலத்தை குறைக்க அல்லது மாற்றிக்குறைப்பதற்கான அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன்படி ஆளுநரிடம் உள்ளது. சட்டங்களை இயற்றுவதற்கு ஒரு மாநிலச் சட்டமன்றம் அதிகாரம் கொண்டுள்ள விடயங்களை மாநில ஆட்சி அதிகாரம் அளாவி நிற்கும் என்பதை வகுமுறைக்கூறு 162 தெளிவாக்குகிறது.ஆளுநர், இந்த அரசமைப்புச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ தம் உளத்தேர்வின்படி செயலாற்றவேண்டிய பதவிப்பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் தவிர, பிற பதவிப்பணிகளை ஆற்றும்போது அவருக்கு உறுதுணையாக இருப்பதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் முதலமைச்சரைத் தலைவராக கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும் என அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 163 வகைசெய்கிறது.

14. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி ஒரு செயலாட்சி அரசு செயல்படக்கூடிய வரம்புகளை, நமது அரசமைப்புச் சட்டம் அமைத்துள்ள நிருவாக அமைப்புமுறையைப் பார்வையிடுவதன் மூலம் மிகுந்த சிரமமின்றி கண்டறிய முடியும். நமது அரசமைப்புச் சட்டம், கூட்டாட்சி அமைப்புமுறையைக் கொண்டிருந்தாலும், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் அமைப்பை மாதிரியாகக் கொண்டது, அதில் அரசின் கொள்கையை உருவாக்குவதற்கும், அதை சட்டமாக மாற்றுவதற்கும் நிருவாகமே முதன்மை பொறுப்புடையதாகக் கருதப்படுகிறது, இருப்பினும், மாநில சட்டமன்றத்தின் நம்பிக்கையைத் தக்க வைப்பது இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கான முன் நிபந்தனையாகும். ஆளுநர், மாநிலத்தின் நிருவாகத் தலைவர் என்ற பதவியை வகிக்கிறார், ஆனால், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அமைச்சரவையே அரசு நிருவாகத்தை நடத்துகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில், இங்கிலாந்தில் உள்ளதைப் போன்று நாடாளுமன்ற நிருவாக முறையையும், அதைப் போலவே அமைச்சரவையையும் நாம் கொண்டுள்ளோம், மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள், பிரிட்டிஷ் அமைச்சரவையைப் போன்றே ஒரு மாநிலத்தின் சட்டமியற்றும் பகுதியை நிருவாகப் பகுதியுடன் இணைத்துப் பிணைக்கும் பாலமாக திகழ்கின்றனர்[3].

15. நமது அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள அரசின் அமைச்சரவை அமைப்பின்கீழ், ஆளுநர் என்பவர் ஒரு மாநிலத்தின் முறைசார் அல்லது அரசமைப்புப்படியான தலைமை ஆவார், மேலும், அரசமைப்புச் சட்டத்தினாலோ அல்லது அதன் கீழோ ஆளுநர் அவரது சொந்த விருப்புரிமையின்பேரில் செயலாற்றுமாறு வேண்டுறுத்தப்படும் விடயங்கள் நீங்கலாக, அவர் அரசமைப்புச் சட்டத்தினாலோ, அதன் கீழோ அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் கடமைகளை அவரது அமைச்சரவையின் உறுதுணை மற்றும் ஆலோசனையின் பேரிலேயே செயலுறுத்துவார்.

.....

3. ராய் சாஹிப் ராம் ஜவாயா கபூர்-எதிர்-பஞ்சாப் மாநில அரசு (1955) 2 எஸ். சி. ஆர். 225.

வகுமுறைக்கூறுகள் 123, 213, 311(2) வரம்புரை (சி), 317, 352(1), 356 மற்றும் 360-இல் உள்ளதுபோன்று நேர்விற்கேற்ப, குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் ஏதேனும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது செயலைச் செய்வதற்கு குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் மனநிறைவடைய வேண்டும் என அரசமைப்புச் சட்டம் கோருகிறவிடத்து, அரசமைப்புச் சட்டம் வேண்டுறுத்துகின்ற மனநிறைவென்பது குடியரசுத்தலைவரின் அல்லது ஆளுநரின் தனிப்பட்ட மனநிறைவை அல்ல, மாறாக, அரசமைப்புப் பொருளின்படி அரசின் அமைச்சரவை அமைப்புமுறையின்கீழ் குடியரசுத்தலைவரின் அல்லது ஆளுநரின் மனநிறைவை ஆகும். இது அமைச்சரவையின் மனநிறைவைக் குறிக்கும், அவர்களின் உறுதுணை மற்றும் ஆலோசனையின்பேரிலேயே குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் பொதுவாக தனது அனைத்து கடமைகளையும் அதிகாரங்களையும் செயலுறுத்துவார். [4]

16. அரசமைப்புச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களின்கீழ் சில செயல்களைச் செய்வதற்கு ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலும், ஆளுநர், தனது சொந்த உளத்தேர்வின்படி சம்பந்தப்பட்ட செயலைச் செய்வதற்கு அவருக்கு அரசமைப்புச் சட்ட வகையத்தின்கீழ் அல்லது அதன்படி வெளிப்படையாக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி, வகுமுறைக்கூறு 163-இன்படி, அவருக்கு உறுதுணையாக இருந்து வழங்கப்படும் ஆலோசனையின்பேரில் மட்டுமே அவர் அவற்றைச் செயலுறுத்த வேண்டும்.[5]

17. **மாரு ராம்-எதிர்- இந்திய ஒன்றியம்**[6] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு, வகுமுறைக்கூறு 161 தொடர்பான நிலைப்பாட்டை இதன்பின்னர் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுபோல் அதிகாரப்பூர்வமாக சுருக்கமாகக் கூறியுள்ளது: "....ஆளுநர் என்பவர் முறைசார் தலைமையாகவும், நிறைவேற்று அதிகாரத்தின் ஒரே உறைவிடமாகவும் திகழ்கிறார், இருப்பினும், அவர் அவரது அமைச்சரவையின் ஆலோசனை இல்லாமல் செயலாற்ற முடியாது.

.....

4. சம்ஷீர் சிங்- எதிர்- பஞ்சாப் மாநில அரசு (1974) 2 எஸ்சிசி 831.

5. நபாம் ரெபியா மற்றும் பமாங் ஃபெலிக்ஸ் -எதிர்- துணை சபாநாயகர், அருணாச்சலப் பிரதேச சட்டப்பேரவை (2016) 8 எஸ். சி. சி. 1

6 (1981) 1 எஸ்சிசி 161

அதன்விளைவாக, மாநில அரசின் ஆலோசனைகளுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் என்பதால், ஆளுநர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாநில அரசு வகுமுறைக்கூறு 161-இன்படி செயல்பட்டு ஆலோசனை வழங்கலாம். ஆகவே, அரசின் முடிவைத் தொடர்ந்து தண்டனை மாற்றியமைக்கப்படலாம் மற்றும் விடுதலை செய்யப்படலாம், ஆளுநரின் ஒப்புதலின்றி உத்தரவுங்கூட பிறப்பிக்கப்படலாம், எனினும், அலுவல்ரீதியான விதிமுறைகளின்-படியும், அரசமைப்பு மாண்பின்பொருட்டும் ஆளுநரின் கையொப்பமானது குற்ற மன்னிப்பு வழங்குவதையோ, தண்டனையை மாற்றியமைப்பதையோ, விடுதலை செய்வதையோ அங்கீகரிக்க வேண்டும் என்பது அவசியமாகும்."

18. **ஷம்ஷீர் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு**[7] எனும் வழக்கிலுள்ள அகவுரையைப் பின்பற்றி, மேற்கொண்டு (மேற்படி) **மாரு ராம்** வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானித்தது யாதெனில், வகுமுறைக்கூறுகள் 72 மற்றும் 161-இன் கீழான அதிகாரங்களைச் செயலுறுத்தும் விடயத்தைப் பொறுத்தவரையில், நமது அரசமைப்புச் சட்டத்தின் திட்டமுறையின்படி மிக உயர்ந்த பதவிப் பொறுப்புகளில் உள்ள இருவர் அவர்களது சொந்த முடிவின்பேரில் செயல்படக்கூடாது, மாறாக, அமைச்சரவையின் உறுதுணை மற்றும் ஆலோசனையின்படியே செயலாற்ற வேண்டும் என்பதாகும். ஆளுநர் என்பவர் மாநில அரசின் கொள்கைகளை வெளிப்படுத்துபவர் மட்டுமே என்பது அரசமைப்பின்படியான முடிவாகும்.

19. இந்த நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட சட்டம், மேலே குறிப்பிட்டவாறு தெளிவாகவும், வெளிப்படையாகவும் உள்ளது.வகுமுறைக்கூறு 161-இன்கீழ் தண்டனைக் காலத்தை குறைப்பது/தண்டனையை மாற்றி அமைப்பது தொடர்பான விடயங்களில் மாநில அமைச்சரவையின் ஆலோசனை ஆளுநரைக் கட்டுப்படுத்தும். மாநில அமைச்சரவையின் பரிந்துரையை இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதற்கான ஆளுநரின் அதிகாரத்தின் அடிப்படை குறித்து எங்களுக்கு திருப்திகரமான பதிலேதும் அளிக்கப்படவுமில்லை, அரசமைப்புச் சட்டத்தின் கீழான எந்த வகையும் சுட்டிக்காட்டப்படவுமில்லை. தற்போதைய வழக்கில், மாநில

.....

7. (1974) 2 எஸ். சி. சி 831

அமைச்சரவையின் பரிந்துரையை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருக்கக் கூடாது. இத்தகைய நடவடிக்கை, மேலே விவரிக்கப்பட்ட அரசமைப்பு திட்டமுறைக்கு முரணானது. 09.09.2018 அன்று மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரை, ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளாக எந்த முடிவும் எடுக்கப்படாமல் ஆளுநர் முன்பாக நிலுவையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.இந்த முடிவு எடுப்பதில் உள்ள தாமதத்திற்கான காரணம் குறித்து இந்நீதிமன்றம் விசாரிக்கத் தொடங்கியபோதுதான், மேல்முறையீட்டாளரின் தண்டனையைக் குறைக்க மாநில அரசு அளித்த பரிந்துரையை ஆளுநர் இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்.

20. ஆளுநர், தனது பதவியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளைச் செயலுறுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அல்லது அத்தகைய அதிகாரங்கள் மற்றும் கடமைகளைச் செயலுறுத்தும்போதும் நிறைவேற்றும்போதும் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதாகக் கூறப்படும் எந்தவொரு செயலுக்கும் அரசமைப்புச் சட்டத்தின்கீழ் ஆளுநருக்கு உள்ள தடைக்காப்பு குறித்து நாங்கள் முழுமையாக அறிந்துள்ளோம். எனினும், இந்நீதிமன்றத்தால் பல்வேறு தீர்முடிவுகளில் தீர்மானிக்கப்பட்டவாறு, வகுமுறைக்கூறு 161-இன்கீழான ஆளுநரின் உத்தரவுகளை நீதிமுறை மறுஆய்வு செய்யும் அதிகாரம் இந்த நீதிமன்றத்திற்கு உள்ளது, அது ஒரு சில காரணங்களின்பேரில் எதிர்த்துரைக்கப்படலாம். **ஏப்பூரு சுதாகர் -எதிர்- ஆ.பி. மாநில அரசு**[8] எனும் வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, வகுமுறைக்கூறு 161-இன்கீழான அதிகாரத்தை செயலுறுத்தாதது நீதிமுறை மறு ஆய்வில் இருந்து விடுபடாது. தனிநபர்களின் விடுதலை தொடர்பாக வகுமுறைக்கூறு 161-இன்கீழ் மனுக்கள் அளிக்கப்பட்டு, மாநில அமைச்சரவை, குறிப்பாக கைதியின் தண்டனை காலத்தை குறைக்கும்/தண்டனையை மாற்றியமைக்கும் பலனை வழங்கி கைதியை விடுவிக்க முடிவு செய்திருக்கும்போது கைதிகளால் அல்லாத, காரணங்கூறி விளக்கமுடியாத தாமதம் என்பது ஏற்கமுடியாததாகும், ஏனெனில், அது ஒரு கைதியின் மோசமான உடல்நிலைக்கும், அவர் மனஉளைச்சல் எதிர்கொள்ளவும் வழிவகுக்கிறது.

.....

8. (2006) 8 எஸ்சிசி 161

21. அமைச்சரவையின் நியாயமில்லாத முடிவை ஆளுநர் தனது உளத்தேர்வின்படி ஆராய்ந்து வேறு முடிவுக்கு வரலாம் என்று கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்குரைஞர், (மேற்படி) **ம.பி. ஸ்பெஷல் போலீஸ் எஸ்டப்ளிஷ்மென்ட்** என்ற வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் அடிப்படையில் வாதிட்டார்.மத்தியப் பிரதேச அரசின் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 197-இன்கீழ் வழக்குத் தொடர அனுமதி வழங்குவது மேற்படி வழக்கின் வழக்குப் பொருளாகும்.சட்டவிரோதமாக நிலங்களை உரிமைமாற்றம் செய்ததாக லோக் ஆயுக்தாவிடம் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், லோக் ஆயுக்தா விசாரணை செய்து, 1988-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் இரு அமைச்சர்கள்மீதும் வழக்குப்பதிவு செய்ய போதுமான காரணங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு அறிக்கை சமர்ப்பித்தது.இரு அமைச்சர்களுக்கும் எதிராக வழக்குத் தொடர அனுமதிப்பதற்கு எந்தச் சான்றும் இல்லை என்று அமைச்சரவை முடிவு செய்தது.எனினும், வழக்குத் தொடர்வதற்கான முகாந்திரம் நிறுவப்பட்டுள்ளது எனக் கருதி, ஆளுநர் அனுமதி வழங்கினார். அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 163-இன் பொருளின்படி, ஆளுநர் தனது உளத்தேர்வின்படி செயல்பட்டிருக்கக்கூடாது எனும் காரணத்தின்பேரில் மனக்குறையுற்ற அமைச்சர்கள், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226-இன்கீழ் நீதிப்பேராணை மனுக்களைத் தாக்கல் செய்தனர். அமைச்சர்களின்மீது வழக்குத் தொடுப்பதற்காக அனுமதி வழங்குவதென்பது ஆளுநர் 'தனது உளத்தேர்வின்படி' செயலுறுத்தக்கூடிய செயல் அல்ல என்றும், மேலும், ஆளுநர் அமைச்சரவையின் துணை மற்றும் ஆலோசனைக்கு முரணாக செயல்பட்டிருக்கக்கூடாது என்றும் தீர்மானித்து அமைச்சர்களின் நீதிப்பேராணை மனுக்களை மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதியரசர் அனுமதித்தார். உயர் நீதிமன்றத்தின் நீதியராயத்தால் இத்தீர்முடிவு உறுதி செய்யப்பட்டது, அதனால் மனக்குறையுற்று இந்த நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீடுகள் தாக்கல் செய்யபட்டன.இந்த நீதிமன்றம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை மாற்றியமைத்து, சாதாரணமான சூழ்நிலைகளில், வழக்குத் தொடுப்பதற்கான அனுமதி வழங்குவதென்பது அமைச்சரவையின் துணை மற்றும் ஆலோசனையின்பேரிலேயே இருக்க வேண்டுமேயன்றி, ஆளுநரின் உளத்தேர்வின்படி அல்ல என்றும், முதலமைச்சரின்மீதோ அல்லது ஓர் அமைச்சரின்மீதோ வழக்குத் தொடுப்பதற்கு அனுமதி வழங்குவதன்மீது தகுதியின் அடிப்படையில் ஆளுநர் தனது

சொந்த உளத்தேர்வின்படி செயல்பட வேண்டும் என விலக்களிக்கப்படலாம் என்றும் தீர்மானித்தது. அமைச்சரவை அனுமதி அளிக்க மறுத்தபோது லோக் ஆயுக்தாவின் அறிக்கை போன்ற தொடர்புடைய பரிசீலனை குறித்து சிந்திக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்தால் கவனத்திற்கொள்ளப்பட்டது, அவ்வாறு தொடர்புடைய சங்கதியை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மறுப்பதோ, அல்லது முடிவு எடுக்கும் நோக்கத்திற்கு பொருத்தமில்லாத தொடர்பற்ற மற்றும் சம்பந்தமில்லாத காரணிகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளோ நிருவாக ஒழுங்கினை சீர்குலைத்துவிடும். அத்தகைய நேர்வுகளில் ஆளுநர் தனது சொந்த உளத்தேர்வின்படி செயல்படலாம், இல்லையெனில், சட்டத்தின் ஆட்சி முற்றிலும் சீர்குலைந்துவிடும் என இந்நீதிமன்றம் கருதியது.

22. (மேற்படி) **ம.பி. ஸ்பெஷல் போலீஸ் எஸ்டப்ளிஷ்மென்ட்** என்ற வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை தற்போதைய வழக்கின் சங்கதிகளுக்குப் பொருந்தாது என நாங்கள் அஞ்சுகிறோம். மாநில அமைச்சரவையால் தொடர்புடைய காரணிகள் பரிசீலிக்கப்படவில்லை அல்லது மாநில அமைச்சரவை பொருத்தமற்ற காரணங்களின் அடிப்படையில் அதன் பரிந்துரையைச் செய்துள்ளது எனும் விடயத்தை நிரூபிப்பதற்கு எத்தகைய வாதங்களும் முன்வைக்கப்படவில்லை.மேலும், தற்போதைய வழக்கில் ஆளுநர், மாநில அமைச்சரவையால் செய்யப்பட்ட பரிந்துரைகளை இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளதை போல் மட்டுமல்லாமல், மேற்படி வழக்கில் ஆளுநர் ஒரு முடிவு எடுத்தார், அது பின்னர் எதிர்த்துரைக்கப்பட்டது.

23. இ.த.ச.-இன் ஏதேனும் வகையங்களின் கீழ் தண்டனை விதிக்கப்படும்போது குற்றமன்னிப்பு வழங்கவோ அல்லது தண்டனைக் காலத்தை குறைக்கவோ அல்லது தண்டனையை மாற்றி வழங்கவோ இந்திய குடியரசுத் தலைவருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது, மேலும், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன்கீழான தனது அதிகாரத்தைச் செயலுறுத்தி குற்றமன்னிப்பு வழங்குவதற்கு ஆளுநருக்கு அதிகாரமில்லை என்று வாதுரைக்க (மேற்படி) **ஸ்ரீஹரண்** வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மீது திரு.நட்ராஜ் பெருமளவில் சார்வுற்றார்.

(மேற்படி) ஸ்ரீஹரன் வழக்கில் அரசமைப்பு அமர்வினால் பரிசீலனைக்காக வனையப்பட்ட விடயங்களுள் ஒன்று, கு.ந.ச., பிரிவுகள் 432 மற்றும் 433- இன்கீழான அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான "உரிய அரசை" தீர்மானிப்பது குறித்ததாகும்.மாண்புமிகு நீதியரசர் திரு. இப்ராஹிம் கலிஃபுல்லா (அவருக்காகவும், மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு.தத்து மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு. கோஸ் அவர்களுக்காகவும் கருத்துரைக்கையில்) அவர்களின் கருத்துரையின்படி பின்வருமாறு பதிலளிக்கப்பட்டது :

"கேள்விகள் 52.3, 52.4 மற்றும் 52.5:

52.3. ஒன்றியத்தின் அதிகாரம் உடனிணைந்துள்ள விடயங்களில் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 432 (7) ஆனது ஒன்றியத்தின் நிறைவேற்று அதிகாரத்திற்கு தெளிவாக முன்னுரிமையளித்து, மாநிலத்தின் நிறைவேற்று அதிகாரத்தை விலக்குகிறதா ?

52.4. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்புப்பட்டியலின் III ஆம் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்பாடுகளில் தண்டனை காலத்தை குறைப்பதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ஒன்றியத்திற்கோ அல்லது மாநிலத்திற்கோ முன்னுரிமை உள்ளதா?

52.5. தொகுப்புச்சட்டத்தின் பிரிவு 432 (7)-இன்படி ஒரு வழக்கில் இரண்டு பொருத்தமான அரசுகள் இருக்க முடியுமா?

விடை

180. உரிய அரசு என்ற தகுநிலையானது மாநில அரசுக்கா மத்திய அரசுக்கா என்பது பிரிவு 432 (6)-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு குற்றவியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தண்டனைக்கான உத்தரவைப் பொறுத்ததாகும், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படியோ அல்லது அரசமைப்புச் சட்டத்திலேயோ மைய அரசுக்கு குறிப்பிட்ட நிறைவேற்று அதிகாரம் வழங்கப்படும்பட்சத்தில், அரசமைப்புச் சட்டத்தின் வகையங்களின்கீழோ, நாடாளுமன்றத்தின் மேற்படி சட்டத்தின்கீழோ குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத்தீர்ப்பு

உள்ளடங்கும்போது அதே விடயப்பொருளின்மீது சட்டமியற்றுவதற்கு மாநில அரசுக்கும் அதிகாரமளிக்கப்பட்டு, அதிகாரம் ஒருங்கிணைந்ததாக இருந்தாலும், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 73 (1) (அ)-இன் வரம்புரையில் உள்ள விதியினைப் பொறுத்து உரிய அரசு என்பது ஒன்றிய அரசாகவே இருக்கும். *ஜி. வி. ரமணய்யா [ஜி. வி. ரமணய்யா-எதிர்- சூப்பரின்டென்டென்ட் ஆப் சென்ட்ரல் ஜெயில், (1974) 3 எஸ். சி. சி. 531: 1974 எஸ். சி. சி. (கிரிமினல்) 6 : ஏ.ஐ.ஆர். 1974 எஸ்.சி. 31]* வழக்கின் தீர்முடிவில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாட்டை பொருத்திப் பார்க்கவேண்டும் அதாவது, பிரிவு 432 (7) (அ)-வின்கீழ் முழுமையாக பொருந்துகின்ற வழக்குகளில், மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நிறைவேற்று அதிகாரத்தின் காரணமாக அதுவே மத்திய அரசுக்கு உரிய அரசு என்ற தகுநிலையுடன் முக்கியத்துவம் அளிக்கும்.பிரிவு 432 (7) (அ)-இன் கீழ் வருகின்ற வழக்குகளைத் தவிர, வேறு அனைத்து வழக்குகளிலும், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் நில ஆள்வரைக்குள் குற்றவாளி தண்டிக்கப்படும்போது அல்லது தண்டனைக்கான உத்தரவு பிறப்பிக்கப்படும்போது மாநில அரசே உரிய அரசாகும்."

24. மாண்புமிகு நீதியரசர் திரு. லலித், (அவருக்காகவும், மாண்புமிகு நீதியரசர் திரு.சாப்ரேக்காகவும் கருத்துரைக்கையில்) ஒருங்கியல்வான கருத்துடன் கேள்விக்கு கீழ்க்காணுமாறு பதிலளித்தார் -

"219. இருப்பினும், தற்போதைய வழக்கில் நாங்கள் இ.த.ச. பிரிவு 302 இன்கீழான குற்றத்தை குறித்து மட்டுமே கவலை கொள்கிறோம். தடாவின் கீழான குற்றங்களைப் பொறுத்தவரையில் எதிர்மேல்முறையீட்டாளர்- குற்றவாளிகள் விடுவிக்கப்படுகின்றனர். இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றம், அரசமைப்புச் சட்டத்தின் VII ஆவது இணைப்புப்பட்டியலின் II-ஆம் பட்டியலின் பதிவு 1-இன் கீழ் உள்ள "பொது ஒழுங்குடன்" நேரடியாகத் தொடர்புடையது, மேலும் அது மாநில அரசின் தனிப்பட்ட வரம்புக்குள் உள்ளது எனும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு.ராகேஷ் திவேதியின் வாதத்தில் வலிமையுள்ளதென

நாங்கள் காண்கிறோம். எங்களது பார்வையில், கேள்விக்குள்ளான குற்றம் மாநில அரசின் தனிப்பட்ட வரம்புக்குள் உள்ளது, இத்தகைய குற்றங்களுக்கு மாநில அரசின் நிறைவேற்று அதிகாரமே விரிவுபடுத்தப்பட வேண்டும்.இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-இன்கீழான குற்றமானது பட்டியல் III-ன் பதிவு 1 உடன் தொடர்புடையது என்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலுங்கூட, இதற்குமுன் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின்படி, அரசமைப்புச் சட்டத்திலோ அல்லது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்திலோ ஏதேனும் குறிப்பிட்ட வகையம் இல்லாதபட்சத்தில், மாநில அரசின் நிருவாக அதிகாரம் மட்டுமே அளாவி நிற்கவேண்டும். அதன்விளைவாக, தற்போதைய வழக்கில் கேள்விக்குள்ளான குற்றத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசே பொருத்தமான அரசாகும். இ.த.ச. பிரிவு 302-இன் கீழான குற்றம் தொடர்பான விடயங்களில், *கே. எம். நானாவதி - எதிர்- ஸ்டேட் ஆப் பம்பாய் [கே.எம். நானாவதி -எதிர்- ஸ்டேட் ஆப் பம்பாய் , ஏ. ஐ. ஆர். 1961 எஸ். சி. 112: (1961) 1 கிரிமினல்.எல்.ஜே. 173: (1961) 1 எஸ். சி. ஆர். 497, பக்கம் 516]* வழக்கில் தொடங்கி, கு.ந.ச.-இன்கீழ் உரிய அரசாக மாநில அரசோ அல்லது வகுமுறைக்கூறு 161-இன்கீழ் ஆளுநரோ உரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை கவனத்திற்கொள்வது உகந்ததாகும்."

25. கு.ந.ச. பிரிவு 432(7) கீழே எடுத்தியம்பப்பட்டுள்ளது.

432. தண்டனையை நிறுத்தி வைப்பதற்கான அல்லது குறைப்பதற்கான அதிகாரம்.

.....

"(7) இந்தப் பிரிவிலும், பிரிவு 433-லும் "உரிய அரசு" என்ற சொற்றொடர்,

(அ) இந்திய ஒன்றியத்தின் நிருவாக அதிகாரத்திற்கு உட்பட்ட விடயம் சம்பந்தமாகவுள்ள சட்டம் எதற்கும் விரோதமாகவோ, (6) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட உத்தரவுக்கு எதிராகவோ செய்யப்பட்ட ஒரு குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில் மத்திய அரசு என்றும்,

(ஆ) மற்ற வழக்குகளில், எந்த மாநில எல்லைக்குள் குற்றவாளி தண்டிக்கப்படுகிறாரோ அல்லது மேற்சொன்ன உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதோ, அந்த மாநில அரசு என்றும் பொருள்படும்.

ஒன்றியத்தின் நிருவாக அதிகாரத்தின் வரம்பினை அறிந்துகொள்வதற்கு இந்த நீதிமன்றம் வகுமுறைக்கூறுகள் 72, 73, 161 மற்றும் 162 ஆகியவற்றை ஆராய்ந்து, விரிவாக பகுப்பாய்வு செய்தது .தீர்ப்புரையிலுள்ள விவாதத்தின் மைய புள்ளியானது அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 73-இன் வரம்புரை தொடர்பானதாகும். வகுமுறைக்கூறு 73(1) கீழ்க்காணுமாறு:

வகுமுறைக்கூறு 73. ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தின் அளாவுகை. –

(1) இந்த அரசமைப்பின் வகையங்களுக்கு உட்பட்டு, ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரம் என்பது-

(அ) சட்டங்களை இயற்றுவதற்கு நாடாளுமன்றம் அதிகாரம் கொண்டுள்ள பொருட்பாடுகளையும், மற்றும்

(ஆ) உடன்படிக்கை அல்லது உடன்பாடு ஒன்றன் காரணமாக இந்திய அரசால் செலுத்தப்படக்கூடிய உரிமைகள், பெற்ற அதிகாரம், அதிகாரவரம்பு ஆகியவற்றைச் செலுத்துவதையும் அளாவி நிற்கும்.

வரம்புரையாக: (அ) உட்கூறில் குறிப்பிடப்பட்ட ஆட்சி அதிகாரமானது, இந்த அரசமைப்பிலோ நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் ஒன்றிலோ வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தால் அன்றி, சட்டங்கள் இயற்றுவதற்கு ஒரு மாநிலச் சட்டமன்றமும் அதிகாரம் கொண்டுள்ள விடயங்களைப் பொறுத்து அந்த மாநிலத்தில் அளாவி நிற்றல் ஆகாது.

...

26. வகுமுறைக்கூறு 73-ஐ ஓத்திருக்கும் வகுமுறைக்கூறு 60 குறித்த அரசமைப்புப் பேரவையின் விவாதங்களைக் குறிப்பீடு செய்தது உள்ளிட்ட விரிவான வாதத்திற்குப் பின்னர், ஒரே விடயப்பொருளின்மீது சட்டங்கள் இயற்றுவதற்கு மாநிலச் சட்டமன்றத்திற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து, ஒன்றிய அரசின் நிறைவேற்று அதிகாரம் மாநில அரசுக்கு விரிவுபடுத்தப்படுமா இல்லையா என்பதை அரசமைப்புச் சட்டத்தின் மூலமாகவோ, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலமாகவோ மைய அரசுக்கு வெளிப்படையாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா எனும் பொருண்மையைக் கருத்திற்கொண்டு முடிவு செய்ய வேண்டும் என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. எனவே, அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்புப்பட்டியலின் பட்டியல் III-இல் பட்டியலிடப்பட்ட பொருட்பாடுகளுக்கு ஒன்றியத்தின் நிறைவேற்று அதிகாரம் அளாவி நிற்குமா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தினாலோ நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தினாலோ ஒன்றியத்திற்கு வெளிப்படையாக நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டதா என்பதை ஆராய வேண்டும், இல்லையெனில், மாநிலத்தின் நிறைவேற்று அதிகாரம் அவ்வாறே நீடித்திருக்கும். எங்களது கருத்துப்படி இ.த.ச. பிரிவு 302 இன் கீழான குற்றங்களைப் பொறுத்தவரையில், அரசமைப்புச் சட்டத்திலோ அல்லது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்திலோ ஒன்றியத்திற்கு வெளிப்படையாக நிருவாக அதிகாரம் அளிக்கின்ற குறிப்பிட்ட வகையம்

ஏதும் இல்லாதபட்சத்தில், பிரிவு 302-இன் கீழான விடயப்பொருளானது, ஏழாவது இணைப்புப்பட்டியலின் பட்டியல் II இல் உள்ள பதிவிலோ, பட்டியல் III-இல் உள்ள பதிவிலோ உள்ளடங்குவதாகக் கருதப்படுகிறதா என்பதைப் பொருட்படுத்தாமல் மாநிலத்தின் நிருவாக அதிகாரம் விரிவுபடுத்தப்படும் என்பது மேற்படி தீர்ப்புரையிலிருந்து தெளிவாகிறது.

27. திரு. சங்கரநாராயணன் சில வழக்குகளின் பட்டியலை சமர்ப்பித்தார், அதில் அவ்வழக்குகளின் குறிப்பிட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் பிரிவு 302-இன் கீழ் மட்டுமோ அல்லது பிற குற்றங்களுடன் சேர்த்தோ குற்றத்தீர்ப்பிடப்பட்ட கைதியை அவரது நீண்டகால சிறைவாசம், சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது பெற்ற கல்வித்தகுதிகள், சிறையில் அவரது நடத்தை மற்றும் கைதிகளை மற்றொரு சுற்று வழக்குக்கு உட்படுத்துவதில் உள்ள பயனின்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்நீதிமன்றம் விடுவிக்க உத்தரவிட்டது.

28. மேல்முறையீட்டாளர் கைது செய்யப்பட்டபோது அவருக்கு 19 வயதாகும் , அவர் 32 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார், அதில் அவர் 16 ஆண்டுகளை மரணத் தண்டனையிலும், 29 ஆண்டுகளை தனிமைச் சிறையிலும் கழித்துள்ளார். சிறையில் அவரது நடத்தை தொடர்பாக எந்தப் புகாரும் இல்லை.மேல்முறையீட்டாளர் பரோலில் விடுவிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களில், அவரது நடத்தை தொடர்பாகவோ, விடுவிக்கப்படும்போதான ஏதேனும் நிபந்தனைகளை மீறியது குறித்தோ எந்தப் புகாரும் இல்லை. மேல்முறையீட்டாளர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ ஆவணங்கள், அவர் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. சிறையில் நன்னடத்தைத் தவிர, மேல்முறையீட்டாளர் படித்து தனது பிளஸ் 2 தேர்வுகள், இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம், பட்டயப் படிப்பு மற்றும் எட்டு சான்றிதழ் படிப்புகளையும் வெற்றிகரமாக முடித்துள்ளார். அவரது தண்டனையைக் குறைப்பதற்காக மாநில அரசு பரிந்துரைத்ததற்குப் பின்னர் வகுமுறைக்கூறு 161-ன் கீழான அவரது மனு இரண்டரை ஆண்டுகளாக நிலுவையில் இருந்ததாலும், மேலும்

ஆளுநரால் அது அனுப்பப்பட்டதிலிருந்து ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் இருப்பதாலும் இந்த விடயத்தை ஆளுநரின் பரிசீலனைக்காக மீண்டும் அனுப்புவது பொருத்தமானது என்று நாங்கள் கருதவில்லை.இவ்வழக்கின் பிரத்யேகமான சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்பேரிலும், வேறேதும் தகுதியின்மை இல்லாததன்பேரிலும் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142-இன் கீழான எங்களது அதிகாரத்தைச் செயலுறுத்துகையில், குற்ற எண் 329/1991 உடன் தொடர்புடைய தண்டனையை மேல்முறையீட்டாளர் அனுபவித்துவிட்டதாக கருதப்படுகிறார் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம். பிணையில் உள்ள மேல்முறையீட்டாளர் உடனடியாக விடுவிக்கப்படுகிறார்.

29. முடிவாக, நாங்கள் எங்களின் காண்முடிவுகளை சுருக்கமாக கீழே விவரித்துள்ளோம்:

(அ) ஆளுநர், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன் கீழான அவரது அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது மாநில அமைச்சரவையின் ஆலோசனை அவரை கட்டுப்படுத்தும் என்பது இந்நீதிமன்றத்தின் தொடர்ச்சியான தீர்ப்புரைகளின்மூலம் வகுக்கப்பட்ட சட்டத்தால் நன்கு அறுதியிடப்பட்டுள்ளது.

(ஆ) அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 161-இன் கீழான அதிகாரத்தை பயன்படுத்தாதது அல்லது அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் கைதியினால் அல்லாத, காரணமில்லா தாமதமானது குறிப்பாக மாநில அமைச்சரவை, கைதியை விடுவிக்க முடிவு செய்து இது தொடர்பாக ஆளுநரிடம் பரிந்துரைத்திருக்கும்போது இந்நீதிமன்றத்தின் நீதிமுறை மறுஆய்வுக்கு உட்பட்டதாகும்.

(இ) ஆளுநர், தமிழ்நாடு அமைச்சரவையின் பரிந்துரையை அப்பரிந்துரை செய்யப்பட்டதிலிருந்து இரண்டரை ஆண்டுகள் கழித்து இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருப்பது அரசமைப்புச் சட்டத்தின் ஏதொரு அடிப்படையும் இல்லாததாகும், மேலும் இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டவாறு [9. (மேற்படி) மாரு ராம்-எதிர்- யூனியன் ஆஃப் இந்தியா] "ஆளுநர் என்பவர் மாநில அரசின் கொள்கைகளை வெளிப்படுத்துபவர் மட்டுமே" என்ற நமது அரசமைப்புச் சட்டத்தின் திட்டமுறைக்கு அது எதிரானதாகும்[9].

(ஈ) (மேற்படி) **மத்திய பிரதேஷ் ஸ்பெஷல் போலீஸ் எஸ்டப்ளிஷ்மென்ட்** எனும் வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை தற்போதைய

வழக்கின் சங்கதிகளுக்குப் பொருந்தமற்றதாகும், மேலும் மேற்படி தீர்ப்புரையின் மையப்புள்ளியாகிய மாநில அமைச்சரவையின் வெளிப்படையான ஒருசார்பு நிலைப்பாட்டையோ அல்லது மாநில அரசு பொருத்தமற்ற பரிசீலனைகளின் அடிப்படையில் முடிவு செய்துள்ளது என்பதையோ நிரூபிப்பதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்-படவில்லை.

.....

9 (மேற்படி) மாரு ராம்-எதிர்- யூனியன் ஆஃப் இந்தியா

(உ) பிரிவு 302-இன் கீழ் விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கவோ/ மாற்றவோ ஒன்றிய அரசுக்கு அதிகாரம் உள்ளதென (மேற்படி) **ஸ்ரீஹரன்** வழக்கில் உள்ள இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையிலிருந்து புரிந்துக் கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது தவறானதாகும், ஏனெனில், பிரிவு 302 தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கீழோ, நாடளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழோ எந்தவொரு வெளிப்படையான நிறைவேற்று அதிகாரமும் மத்திய அரசுக்கு வழங்கப்படவில்லை. அத்தகைய குறிப்பிட்ட அதிகாரமளிப்பு இல்லாதநிலையில், பிரிவு 302-இன் கீழான விடயப்பொருளானது பட்டியல் III-இன் பதிவு 1-இல் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று கருதி, பிரிவு 302 தொடர்பான மாநிலத்தின் நிறைவேற்று அதிகாரம் நீட்டிக்கப்படும்.

(ஊ) மேல்முறையீட்டாளரின் நீண்டகால சிறைவாசம், சிறைவாசத்தின்போதும், பரோலின்போதும் அவரது திருப்திகரமான நடத்தை, அவரது மருத்துவ ஆவணங்களில் இருந்து வெளிப்படும் நாள்பட்ட நோய்கள், சிறைவாசத்தின்போது அவர் பெற்ற கல்வித் தகுதிகள் மற்றும் மாநில அமைச்சரவையின் பரிந்துரைக்குப் பின்னர் வகுமுறைக்கூறு 161-இன் கீழான அவரது மனு இரண்டரை ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இவ்விடயத்தை ஆளுநரின் பரிசீலனைக்காக மீண்டும் அனுப்புவது உகந்ததென நாங்கள் கருதவில்லை.அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142-இன்படியான எங்களது அதிகாரத்தைச் செயலுறுத்தி, மேல்முறையீட்டாளர் குற்ற எண் 329/1991 தொடர்பான தண்டனையை அனுபவித்ததாகக் கருதப்படுகிறார் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம்.

ஏற்கெனவே பிணையில் உள்ள மேல்முறையீட்டாளர் உடனடியாக விடுவிக்கப்படுகிறார்.அவரது பிணை பத்திரங்கள் இரத்து செய்யப்படுகின்றன.

30. அதன்படி மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்படுகின்றன.

மாண்புமிகு நீதியரசர் திரு. எல். நாகேஸ்வர ராவ்
மாண்புமிகு நீதியரசர் திரு. பி. ஆர். கவாய்
மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.எஸ். போபண்ணா

புது தில்லி,
மே 18, 2022.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக்கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "